இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 110 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 14 – ஞாயிற்றுக்கிழமை 30 நவம்பர் 2025 – மதுரை 12 + 26 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 110: Thiruvalluvar Year - 2056 - Karthigai 14 - Sunday 30 November 2025 - Madurai 12 + 26 Pages ₹ 5.00

## மாநில உரிமைகளை மதிக்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து ஒன்றிய – மாநில அரசு உறவில்

# கருப்பு அத்தியாயத்தை உருவாக்கியுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் கண்டனம்!

**சென்னை, நவ. 30 -**

**“மாநில உரிமைகளை மதிக்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து ஒன்றிய - மாநில அரசு உறவில் ஓர் கருப்பு அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு” என்று கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (29.11.2025) காலை 10.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள முரசொலி மாறன் வளாக கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற “தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்” நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு: -



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளரும், கழக மக்களவை குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தீர்மானம் : 1

திராவிட மாடல் அரசின் மகத்தான சாதனையாக இதுவரை 17 முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, 1016 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உருவாக்கி, 11 லட்சத்து 40 ஆயிரத்து 731 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 34 லட்சம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி “TN Rising” என்ற உச்சத்தைத் தொட்டிருக்கின்ற தமிழ்நாடு, தொழில் வளர்ச்சியிலும் - சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் - மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி “எல்லாருக்கும் எல்லாம்” என்ற உன்னத நிலையை உருவாக்கி ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நோக்கி பீடுநடை போட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், நம் மாநிலத்தின் வளர்ச்சியைப் பார்த்து பொறாமைப்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, நிதி ஆணையத்தின் வாயிலாக நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் மற்றும் அந்த ஆணையம் அளித்துள்ள அதிகாரப் பகிர்வுகளை அளிக்க மறுப்பது, மாநிலங்களில் செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் திட்டங்களின் நிதிச்சுமையை இதுவரை இல்லாத அளவிற்கு மாநில அரசின் தலையில் சுமத்துவது, ஒன்றிய அரசு மட்டுமே ‘செஸ்’ வசூலித்து மாநிலத்திற்கு அறவே அளிக்க மறுப்பது, ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்காமல் நிராகரித்து, மாநிலத்தின் வரிகளை மட்டும் வசூலித்துக் கொள்வது, மக்கள் நலன் சார்ந்த நல்லாட்சியினை மாநிலத்தில் நடத்துவதற்கு அனைத்து வகையிலும் முட்டுக்கட்டை போடுவது, பா.ஜ.க.வை ஆதரிக்கும் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் நிதியை வாரி வழங்குவது, சி.பி.ஐ. - அமலாக்கத்துறை - வருமானவரித்துறை என அனைத்து தன்னாட்சி அமைப்புகளையும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அதிகார துஷ்பிரயோகம் செய்யத் தூண்டுவது, எல்லாவற்றுக்கும் மேலாக ஆளுநர்களை நியமித்து, பா.ஜ.க. அரசு இல்லாத மாநிலங்களில் அராஜகத்தில் ஈடுபடுவது எனக் கூட்டாட்சிக் கருத்தியலைச் சிதைக்கும் நடவடிக்கைகளைத் தனது அன்றாட “அரசு நடவடிக்கைகளாக” ஆக்கிக் கொண்டுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு, திட்டம் போட்டு தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தைத் தடுத்து, நம் மாநிலத்திற்கான எந்த முத்திரைத் திட்டங்களும் தராமல் மறுத்து, அறிவிக்கப்பட்ட ஒன்றிரண்டு திட்டங்களைக்கூட முடக்கி, “ஒன்றிய - மாநில அரசு நிர்வாக ஒத்துழைப்பில் - உறவில்” ஓர் கருப்பு அத்தியாயத்தை உருவாக்கியுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு இக்கூட்டம் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்து, “ஒன்றிய அரசே! ஒன்றியஅரசே! மக்கள் நலன் காப்பதில் முதல்வரிசையில் நிற்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களை வஞ்சிக்காதே!!” என்ற உரிமைக்குரலை இந்தக் கூட்டம் முன்வைக்கிறது.

### தீர்மானம் : 2

**ரயில் திட்டங்களிலும் நிதி ஒதுக்கீட்டிலும் தமிழ்நாட்டைத் தொடர்ந்து புறக்கணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகத்திற்குக் கண்டனம்!**

“புதிய ரயில் திட்டங்களும் இல்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட பல்வேறு முக்கியமான ரயில் திட்டங்களும் செயல்படுத்தப்படுவதில்லை” என்று தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

“ரயில்வே திட்டங்களில் புதிய வழித்தடத்திற்கு 2024-25-இல் 31 ஆயிரத்து 450 கோடி ரூபாய் ஒதுக்கீடு. ஆனால் தெற்கு ரயில்வேக்கு வெறும் 301 கோடி ரூபாய் மட்டும்” என்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாரபட்சமான அணுகுமுறையால் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கழகத் தலைவரும் - முதலமைச்சர் அவர்களும் பிரதமர் அவர்களைச் சந்திக்கும் நேரங்களிலெல்லாம் தவறாமல் புதிய ரயில் திட்டங்கள், தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள ரயில் திட்டங்களைப் பற்றிப் பேசுகிறார்; வலியுறுத்துகிறார்; கழகத் தலைவரின் ஆணைக்கிணங்க நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்புகிறோம். ஆனால் திட்டங்களை அறிவிக்கும்போது “தமிழ்நாடு” என்ற மாநிலத்தின் பெயரையே ஒன்றிய பா.ஜ.க. அரசு மறந்து விடுகிறது.

தமிழ்நாட்டிற்கு ரயில்வே திட்டங்களுக்கு நிதியும் ஒதுக்காமல் வெறுக்கிறார்கள். புதிய திட்டங்களையும் அறிவிக்க மறுக்கிறார்கள். ரயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் நிலையை உடனடியாகக் கைவிட்டு, மாநிலத்திற்கான ரயில்வே திட்டங்களை நிறைவேற்றிடுக! என இக்கூட்டம் ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் : 3

**பிரதமர் நேரில் தலையிட்டு கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை அனுமதிக்க வேண்டும்!**

‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ என அழைக்கப்படும் கோவைக்கும், கோயில் நகரமான மதுரைக்கும் மெட்ரோ ரயில் திட்டம் வேண்டும் என்ற கோரிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கழக அரசின் சார்பில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் இருமுறை நேரில் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார். கடிதம் வாயிலாகவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள்தொகை அளவுகோல் காட்டி, தமிழ்நாட்டிற்கு மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, அதே அளவுகோல்படி இதே திட்டத்தை ஆக்ரா, இந்தூர், பாட்னா போன்ற இரண்டாம் நிலை நகரங்களில் நிறைவேற்றியிருக்க வாய்ப்பில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள் கோவை, மதுரைக்கு மெட்ரோ ரயில் திட்டத்தை மறுப்பதற்குக் கூறப்பட்டுள்ள காரணங்கள் “தமிழ்நாட்டிற்கு என்றே தனிப்பட்ட உருவாக்கம்” என்பதை மிகத் தெளிவாகப் பிரதமருக்கே கடிதம் மூலம் விளக்கி, இத்திட்டம் குறித்த விரிவான திட்ட அறிக்கையை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் எனவும், தேவைப்பட்டால் நேரில் வந்து கூட சந்திக்கத் தயார் என்றும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். இவ்வளவுக்குப் பிறகும், கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் குறித்து ஒன்றிய அரசு வாய் திறக்காமல் இருப்பது தமிழ்நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் விரோதமான செயல் என இக்கூட்டம் தனது கண்டனத்தைப் பதிவுசெய்து, இந்த மெட்ரோ ரயில் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கிட பிரதமர் அவர்கள் நேரிடையாகத் தலையிட வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

மேலும், இந்த மெட்ரோ ரயில்திட்டங்கள் வருவதற்கு அ.தி.மு.க. துளியளவும் துணை நிற்கவில்லை என்றாலும், “கைக்குட்டையும் கையுமாகச் சென்று” பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துவிட்டு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகத்திற்குத் துணை போக வேண்டாம் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் : 4

**கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கம், மதுரை பன்னாட்டு விமான நிலையத் திட்டம் ஆகியவற்றிற்கு அனுமதி தந்திடுக!**

உட்கட்டமைப்பைப் பெருக்குவது என்பது ஒரு மாநில வளர்ச்சியின் உயிர்மூச்சு. அதனை திராவிட மாடல் அரசு வேகமாக மட்டுமின்றி, அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகச் செய்து வருகிறது. மாநிலத்தில் அமையும் உயர்மட்ட மேம்பாலங்கள் - நூலகங்கள் - உயர்தர மருத்துவமனைகள் ஆகியவையே இன்றைக்கு இந்த அரசின் சாதனை அடையாளங்களாகக் காட்சியளிக்கின்றன.

அசாத்திய வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தை அடுத்தகட்டத்திற்குக் கொண்டு செல்ல, கோவை மற்றும் மதுரை விமான நிலையங்களை விரிவாக்கம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம்! மதுரை விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாக அறிவிக்க வேண்டியதும் மிகவும் அவசியம்!

கழக அரசின் சார்பில் இந்த இரு கோரிக்கைகளை ஒன்றிய அரசுக்கு முன்வைத்தும், இரண்டு கோரிக்கைகளையுமே நிராகரித்து விட்டு தமிழ்நாட்டு மக்களிடம் வாக்கு கேட்டு வரத் துடிக்கிறார்கள். தமிழில் பேசி நடிக்க முனைகிறார்கள். கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கத்தை நிராகரித்துள்ளதற்கோ - கிடப்பில் போடுவதற்கோ ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எவ்வித நியாயமான காரணமும் இல்லை என்பதால், மாநிலத்தின் உட்கட்டமைப்பு மற்றும் முன்னேற்றத்தை மனதில் கொண்டு, கோவை - மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களுக்கும் - மதுரை பன்னாட்டு விமான நிலையத் திற்கும் விரைந்து ஒப்புதல் அளிக்குமாறு ஒன்றிய பா.ஜ.க. அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## கலைஞர் பெயரில் பல்கலைக் கழகம்!

## சட்டப் போராட்டத்தில் ஓயமாட்டோம்!



**மக்களாட்சித் தத்துவத்தை நிலைநாட்டிட உச்சநீதிமன்றத்தைக் கழக அரசு நாடியுள்ள நிலையில், கலைஞர் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவிற்குக் குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் எனவும், சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க கால நிர்ணயம் செய்யும் சட்டப் போராட்டத்தில் ஓயமாட்டோம் எனவும் கழகத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அவர்களின் சபதத்தை நிறைவேற்றும் வகையில் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கழக எம்.பி.க்கள் குரல் கொடுப்பது எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.**